புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# புறநானூற்றில் சூழலியல் சிந்தனைகள்

**ஆய்வாளர்**
**கோ பெரியசாமி**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),*
*கணேசர் கலை அறிவியல் கல்லூரி,*
*மேலைச்சிவபுரி,*
*பொன்னமராவதி, புதுக்கோட்டை-622403.*

**நெறியாளர்**
**முனைவர். பொன். கதிரேசன்,**
*கணேசர் கலை அறிவியல் கல்லூரி,*
*மேலைச்சிவபுரி,*
*பொன்னமராவதி, புதுக்கோட்டை-622403.*

*ஆய்வுச்சுருக்கம் :*

*ஐம்பெரும் பூதங்களின் இயல்பை உணர்த்தும் சிந்தனை சூழலியல் சிந்தனைக்கு உதாரணமாக அமைந்துள்ளது. புறநானூற்றில் சூழலியல் சிந்தனைகள் விரவிக் காணப்படுகின்றன. சங்க காலத்தில் தமிழர்கள் நீர் மேலாண்மை செய்த விதம், நீரினை அணைகட்டி சேமித்த திறம், நீரின்றி அமையாத வாழ்க்கை சூழலில் கிணறு தோண்டி தங்கள் நீர் தேவையை பூர்த்தி செய்து கொண்ட ஆற்றல் எல்லாம் சூழலியல் சிந்தனைக்கு உதாரணமாக அமைந்துள்ளது. போர்க்காலங்களில் மன்னன் ஊரை தீக்கு இரையாக்கிய செய்தியும், காவல் மரங்களை வெட்டியும், எரித்த செய்திகள் மனிதன் தங்களுக்குள் உள்ள பகையை இயற்கை மீது காட்டி அழித்த செய்தி வருந்தும் வகையில் அமைந்து உள்ளது. இந்திய எல்லைகளை வரையறுத்துக் கூறும் செய்திகள் அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்தில் சங்க தமிழர்கள் நிலவியல் கூறுகளை அறிந்து இருந்தது சூழல் அறிவுக்கு முன்னோடியாக அமைந்திருக்கிறது. புறநானூறு ஒரு சூழலியல் களஞ்சியம் என்று நிரூபிக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

*முன்னுரை :*

*சங்க காலம் முதற்கொண்டே சூழலியல் சிந்தனையில் தமிழர்கள் தனித்துவம் மிக்கவர்களாக இருந்தனர். இயற்கை சூழல் அறிவை பெற்று திறம்பட பெற்று இருந்தனர். நிலம், நீர் பற்றிய சூழல் அறிவையும் காற்று, வானில் நிகழும் விண்மீன் இயக்க அறிவும் மழை பற்றிய சூழலியல் சிந்தனைகள் வியப்பைத் தருகின்றது. புறநானூறு காலத்துக்கு*

முந்தைய காலங்களில் இருந்தே ஐம்பெரும் பூதங்கள் பற்றிய பாகுபாடு செய்து இருந்ததும் அதன் சூழலியல் இயல்புகளை விளக்கும் அறிவும் வியப்பைத் தருகின்றது.

பஞ்ச பூத அறிவு :

இயற்கை என்பதே பஞ்ச பூதங்களால் அமைந்த ஒன்றாகும். பஞ்ச பூதங்கள் இல்லை என்றால் இயற்கையில் எந்த ஒரு உயிரினமும் உயிர் வாழ முடியாது. உயிர் அற்ற ஜடப் பொருட்களின் மீதே உயிர்கள் வாழ்கின்றன. உலகின் இயக்கத்துக்கு முதல் காரணமாக அமைபவை பஞ்ச பூதங்கள் ஆகும். இதை உணர்ந்தே பஞ்ச பூதங்களை வகுத்துக் காட்டியது மட்டும் அல்லாமல் அவை ஒன்றோடு ஒன்று பிணைந்தது என்பதை இந்த பாடல் விளக்குகிறது.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வழியும்
வளித்தலை இய தீயும்
தீமுரணிய நீருமென்றங்கு
ஐம்பெரு பூதத்து இயற்கைப் போல புறம்பாடல் -2 அடி 1-6

செழுமை மிக்க மண் மிகுந்த நிலமும், நிலத்தின் மேல் உள்ளது ஆகாயம், ஆகாயம் தொட்டு இயங்கும் காற்று, காற்று வீசும் திசையோடு பரவும் தீ, தீக்கு முரணான நீரும் என்று இலங்குவது ஐம்பெரும் பூதத்து இயற்கை ஆகும். இந்த பூமி சூழலில் பஞ்ச பூதமே முதல் ஆதாரம். அதுவே இயற்கை என்கிறது புறநானூறு. இந்த செய்தி சூழலியல் தொகுப்பில் பஞ்ச பூதங்கள் இன்றியமையாததை விளக்கி காட்டுகிறது புறநானூறு.

நீர் சூழலியல் :

சுற்றுச்சூழலின் மற்றொரு கூறாகிய நீர்வளம் அதாவது குளம், குட்டை, ஏரிகள், ஆறுகள், கடல்கள் என அனைத்தினுடைய தன்மையும், தரமும் காக்கப்பட வேண்டும். மாந்தன் பயன்பாட்டுக்கு மிக்க குறைந்த, அதாவது ஒரு விழுக்காடு நன்னீரே உலகில் உள்ளது. அதை பேணப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது. சங்கத் தமிழர்கள் நீரின் அவசியத்தை நன்கு உணர்ந்து இருந்தனர் என்பதற்கு நிறைய சான்றுகள் உள்ளன அவைகளைக் காண்போம்.

''ஊர் இல்ல உயவு அரிய'
நீர் இல்ல, நீள் இடையே '' புறம் பாடல் -3 அடி :17-18

வழிப்பயணங்களில் ஊர்கள் இல்லை ஆதலால் தாகம் தீர்க்கும் நீர் இல்லை என்கிறார் புலவர். நீர் நிலைகள் அமைந்த ஊர்கள் தாகம் தீர்த்தன. என்பது இதன் உட்பொருளாகும். அது இல்லாத இடங்கள் உயிர்கள் வாழவும் மனிதன் வாழவும் இயலாது என்பதே புலவரின் துணிபாகும்.

'' நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே!
நீரும் நிலனும் புணரியோர்; ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே!
புறம் பாடல்:18 அடி: 18-23

''நிலன் நெளி மருங்கின் நீர்நிலைப் பிருகத்
தட்டோர் அம்ம!''

*புறம் பாடல்:18 அடி: 28-29*

*தண்ணீர் இன்றி இந்த வையம் அமையாது. இந்த உடம்பும் உயிர் வாழ முடியாது. இந்த உடம்பு உணவுப் பொருளையே முதன்மையாக கொண்டுள்ளது. உணவு என்று சொல்லப்படுவது, நிலத்தையும் நீரையும் கொண்டு உற்பத்தியாகிறது. நிலத்தையும் நீரையும் பேணிப் பாது காப்பவர் ஈண்டு உடம்பையும் உயிரையும் கொடுத்து வாழ்வித்தவர் ஆகிறார் என்கிறது இப்பாடல் வரிகள் சங்க கால மக்கள் நிலமும் நீரும் சூழல் வாழ்க்கைக்கு அவசியம் என்பதை அறிந்து நிலம் நீர் சூழலை பேணிப் போற்றியமை புலப்படுகிறது. நிலம் இருந்தும் நீர்நிலைகள் இல்லை என்றால் அந்த நிலம் பயனற்றதாகும் ஆகையால் நீர்நிலைகளை பெருக்குவதற்கு குளங்கள் தோண்ட வேண்டும். என்று சான்றோர் பெருமக்கள் அறிவுறுத்தினர். அதன் படி ஊர் பெரியோர்களும் மன்னர்களும் செயல்பட்டதை புறநானூற்றின் பாடல் மூலம் அறிய முடிகிறது.*

*வறட்சி :*

*நீண்ட நாட்களுக்கு மழை பெய்யாமல் போனால் வறட்சி என்பது இந்த உலகை அழித்துவிடும் இதை ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்த உலகம் வறட்சியைக் கண்டுள்ளது. அது சங்க கால மக்கள் வாழ்விலும் இடம்பெற்ற செய்தியை புறநானூறு கூறியுள்ளது.*

*"வினைபுனை நல்இல் இனைகூஉக் கேட்பவும்"*

*புறம் பாடல்:44 அடி: 7-8*

*இந்த பாடல் அடி இல்லங்களில் குடிநீர் இன்றி மக்கள் கூக்குரல் இட்டு வருந்துகிறார்கள் என்ற செய்தியை பதிவு செய்கிறது. இது சங்க காலச் சூழலில் மிகவும் கடினமான சூழல் என்றே சொல்ல வேண்டும். இன்றைய காலத்தில் தண்ணீர் லாரிகளில் ஒரு ஊர் விட்டு மற்றொரு ஊருக்கு நீர் கொண்டு சென்று மக்கள் தங்கள் தேவைகளை தீர்த்துக் கொள்ளும் சொல்லல் உள்ளது. ஆனால் அவ்வாறான எந்திரங்கள் எதுவும் இல்லாதது மக்கள் துன்பத்திற்கு வழி வகுத்து இருந்திருக்கும் என்பதே நிதர்சனமான உண்மையாகும். இவாறான சொல்லலில் மனிதருக்கே நீர் இல்லாத பொழுது கால்நடைகளுக்கு இந்த சூழலில் சங்கத் தமிழர் என்ன செய்து இருப்பார்கள் என்பதை இந்த பாடல் விளக்குகிறது.*

*"அருவி மாறி, அஞ்சு வரக் கருகி,*
*பெரு வறங்கூர்ந்த வேனிற்காலை"*

*புறம் பாடல்:224 அடி: 12-13*

*அருவி நீர் அற்றுப்போய் பலரும் அஞ்சுகின்ற பெரிய வறுமை சூழ்ந்த கோடைக் காலத்தில் பசித்த ஆநிரைகள் பசி தீரும் பொருட்டுக் கூர்மை மிக்க வாளால் கோவலர்கள் வேங்கை மரத்தின் பூக்கள் உதிருமாறு தழை செறிய அமைந்த கிளைகளை வெட்டிக் கிழிப்பர்; நீர் இல்லாத வறட்சியான சூழலில் பசுக்களின் தாகம் தீர்க்கும் தழைகளைக் கண்டு அறிந்து செயல்பட்ட சங்கத் தமிழரின் அறிவு நுட்பம் போற்றுதற்கு உரிய செயலாகும்.*

*"களர்படு கூவல் தோண்டி"*

*புறம் பாடல்:311 அடி:1*

*"பூவற் படுவில் கூவல் தோண்டிய*
*செங்கண் சில்நீர் பெய்த சீறில்*
*மூன்றில் இருந்த முதுவாய்ச் சாடி*
*யாம் கடு உண்டென, வறிது மாசு இன்று;*

*புறம் பாடல்:319 அடி:1-4*

*உவர்நிலத்தில் நீர் தோண்டி மக்கள் நீர் தேவையை பூர்த்தி செய்து கொண்டனர். மேலும் செம்மண் நிலத்தில் அமைந்த மடுவில், கிணற்றைத் தோண்டுதலால் உண்டாக்கிய சிவந்த இடத்தில் இருந்து பெறப்பட்ட சிலவாகிய நீரைச் சிறப்பில்லாத இல்லத்தின் முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள பழமைவாய்ந்த அகன்ற வாயினுடைய சாடியில் பெய்து வைத்து இருப்பர். அந்நீரினை தெளியச் செய்வதற்காக யாம் கடுக்காயை இட்டு வைத்தமையால், அந்நீர் சிறிது மாசில்லாத்ததாய் ஆயிற்று. வறட்சியான காலங்களில் சங்க தமிழர்கள் கிணறு தோண்டி நீர் தேவையை பூர்த்தி செய்து கொண்டமையும். அதை தூய்மை படுத்த கடுக்காய் பயன்படுத்தியமை மற்றுமொரு சூழலியல் சிந்தனைக்கு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.*

*விண்ணியல் அறிவு:*

*பழந்தமிழர்கள் வான சாஸ்திரம், பருவ மழை , காற்று வீசும் திசை பற்றிய அறிவு ஆகியவற்றில் சூழல் அறிவைப் பெற்று இருந்தார்கள்.*

*செஞ்ஞாயிற்றுச் செலவும்,*
*அஞ்ஞா யிற்று பரிப்பும்,*
*பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,*
*வளிதிரி தரு திசையும்,*
*வறிது நிலைஇய காயமும் என்றிவை,*
*சென்றளந்து அறிந்தோர் போல என்றும்*
*இணைத்து என்போரும் உளரே!*

*புறம் பாடல்:30 அடி:1-9*

*சூரியன் செல்கின்ற பாதையும், அதன் இயக்கமும், அதனால் விளங்கும் மண்டலமும், அம்மண்டலத்துள் செல்கின்ற காற்றின் இயக்கமும், திசையும், ஆதாரமின்றி விளங்கும் ஆகாயமும் ஆகியவற்றைத் தாமே அவ்விடம் சென்று அளக்காது இங்கு இருந்தே அறியும் அறிவுடைய மேலோர்கள் இங்கு உள்ளார்கள். என்னும் புறநானூற்றுப் பாடல் பழந்தமிழரின் விண்ணியல் அறிவுக்கு சான்று பகரும் வகையில் அமைந்துள்ளது. எந்த ஒரு தொலைநோக்கி கருவியோ, செயற்கைகோள் அனுப்பும் வசதியோ இல்லாத காலத்தில் மிக துல்லியமாக வானத்தை பற்றிய செய்திகளும், விண்மீன்கள் பற்றிய செய்திகளும், வான சாஸ்திரம் பற்றிய செய்திகளை படிக்கும் போது சங்க தமிழரின் வானியல் பற்றிய அறிவித்த திறமையையும் சூழல் அறிவையும் வியக்காமல் இருக்க முடியவில்லை. எட்டுத்திசைகளிலும் எரிகற்கள் விழும் செய்தியும் பதிவு செய்து இருக்கிறது. (புறம் பாடல் 41 அடி 4)*

*"மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்*
*தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்"*

*புறம் பாடல்:117 அடி:1-2*

*"சனிக்கோள் மாறுபாடு கொண்டு புகைந்தாலும், தூமகேது (எரிகற்கள்அல்லது எரி நட்சத்திரம் ) தோன்றி அச்ச உணர்வை தோண்டினாலும், தெற்கு திசையை நோக்கி வெள்ளிக் கிரகம் போக்குற்றாலும்" இவ்வரிகள் வான சாஸ்திரம் பற்றியும் வின் கற்கள் பற்றிய செய்தியையும் கூறுகின்றது இது விண்ணியல் சூழலை அறிந்தது மட்டும் அல்லாமல் அதன் போக்குகள் மூலம் புவி மண்டலத்துக்கு தீங்கு நிகழும் என்ற சூழல் அறிவையும் சங்க தமிழர் அறிந்தது விந்தியான ஒன்றாகும். வெள்ளி கோள்*

*அதிகாலையில் தோன்றும் இதை இன்றும் கிராமங்களில் மக்கள் விடிவெள்ளி என்று அழைப்பார்கள். இந்த விடிவெள்ளியின் மூலமாகவே அதிகாலை புலர்ந்த செய்தியை அறிந்து செயல்படுவதைக் காண முடிகிறது. இந்த வெள்ளிக்கோள் நகர்வுவும் அதன் மூலம் ஏற்படும் உண்டாகும் தீங்கு பற்றியும் கூறுவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பூமிதான் சூரியனை சுற்றுகிறது ஜோதிட சாஸ்திரம் பூமியை சுற்றுவதாக கணிக்கப்படுவது சரியானதா? என்று தற்கால ஜோதிட வல்லுனரிடம் கேள்வி எழுப்பிய போது அதற்கு அவர் சுற்றும் முறை மாறினாலும் கணித அடிப்படையில் கணக்கு ஒன்றுதான் என்று தற்கால அறிவியல் அறிஞர்களும் ஒப்புக் கொண்டது குறிப்பிடத்தக்க ஒரு தகவல் ஆகும். விண்ணில் உள்ள கோள்கள் மண்ணையும் மண்ணில் உள்ள உயிர்களையும் தாக்கத்திற்கு உள்ளாக்குகிறது என்பது மற்றுமொரு சூழல் அறிவியலில் அறிய வேண்டிய ஒரு செய்தியாகும்.*

*மரங்களை அழித்தல் :*

*பழங்காலத்தில் மன்னர்கள் தங்கள் பகை நாட்டின் மீது போர் தொடுத்த போது பகைவர் நாட்டையும், விளை நிலங்களையும் காவல் மரங்களையும் அழித்தனர் இது இயற்கைக்கு விளைவிக்கும் தீங்கு ஆகும்.*

*''கடிமரம் தடித்தல் ஓம்பு''*

*புறம் பாடல்:57 அடி:10*

*புலவர் காரிக்கண்ணனார் பாண்டியன் நன்மாறனைப் பார்த்து எதிரி படைகளை அழி, விளைநிலங்களை கொள்ளையிடு, ஊருக்கு நெருப்பிட்டு அழி ஆனால் காவல் மரங்களை மட்டும் அழிக்காதே என்கிறார். இப்பாடல் மரங்களை அழிக்க வேண்டாம் என்று கூறி இருப்பது மிகவும் சிறப்பான சூழல் சிந்தனையாக உள்ளது. ஆனால் ஊரை தீயிட்டு அழி என்று கூறி இருப்பது வருத்தம் அளிக்கிறது. இன்றும் போர் காலங்களில் பொது மக்களும் இயற்கையும் அணு ஆயுதங்களுக்கு இரையாவது தொடர்கதையாக உள்ளது. இந்த செயல் சூழல் மண்டலத்துக்கு மனிதன் செய்யும் பெரும் இடையூறு ஆகும்.*

*முடிவுரை :*

*புறநானூற்று காலத் தமிழகம் இன்று இல்லை. ஆறுகள் அனைத்தும் சாயக்கழிவுகள் நிரம்பி வழிகின்றது. மலைகளில் அருவிகளில் வன உயிர்கள் வாழும் இடங்களில் குளிர்பான பாட்டில்களும், மது குப்பிகளை போட்டு மனிதன் சீரழித்து வருகின்றான். தமிழ் இனம் தங்கள் வாழ்வியல் சூழலையும் மறந்து மெல்ல மெல்ல மேலை நாட்டு மோகத்தால், நுகர்வோர் கலாச்சாரத்திற்கு நகர்ந்ததன் விளைவு இன்று கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டுள்ளன. அதன்மூலம் ஒழுக்க சிதைவும் அலட்சியப்போக்கும் மிஞ்சியுள்ளது. இந்த நிலை மாறவேண்டும். இயற்கை பாதுகாக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். சூழலியல் சிந்தனைகள் பழந்தமிழர் வழி நின்று தமிழ் இனத்தின் தனி அடையாளத்துடன் புதிய தமிழ் உலகம் படைக்க வேண்டும்.*

*தொகுப்புரை:*

*இவ்வாறாக பழந்தமிழர்கள் சிறந்த சூழலியல் சிந்தனை உள்ளவர்களாக இருந்தது தமிழ் இனத்துக்கு பெருமை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. வறட்சியான காலங்களில் கிணறு தோண்டி நீர் ஆதாரம் பெற்றது. ஏரி, குளம், குட்டை அமைத்து நீர் நிலைகளை பேணிய விதம் அனைத்தும் இயற்கையை போற்றியது அனைத்தும் சூழலியல் சிந்தனைக்கு அரணாக அமைந்துள்ளது. வான சாஸ்திர அறிவும், விண்ணியல் அறிவும், மழை பொழியும் பருவக் காலங்கள் பற்றிய அறிவும் பார்க்கும் போது பழந்தமிழர்களை எண்ணி வியப்படைவது மட்டும் அல்லாமல் போற்றும் வகையிலும் அமைந்துள்ளது. பண்டைத் தமிழர்கள் பேணிய இயற்கையை நாம் இன்று சீரழித்து வருகின்றோம் என்பதே உண்மை. இந்த நிலை மாற வேண்டும். அருவிகள், காடுகள்,*

*மலைகள், நீர்நிலைகள் அனைத்தும் அமிலக்கழிவுகள் நிரம்பி வழிகின்றன. இயற்கை மெல்ல மெல்ல தன் இயல்பில் இருந்து மாறி செயற்கையால் அழிந்து வருகின்றது. சூழல் அறச்சிந்தனை பரவ வேண்டும். இயற்கையை பாதுகாக்க எல்லோரும் கைகோர்த்து செயல்பட வேண்டும்.*

*ஆய்விற்கு பயன்பட்ட நூல்கள் :*


1. *உரையாசிரியர்கள் : கு.வே.பாலசுப்ரமணியன் அ.விஸ்வநாதன். 2004 புறநானூறு மூலமும் உரையும் புத்தகம் 1&2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி ) லிட்., சென்னை - 98.*
2. *ஆ.அரிமாப்பாமகன், 2017 சங்க இலக்கியத்தில் சூழலியல் , இராசகுணா பதிப்பகம், சென்னை -91.*